பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 12 2024 **SATURDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அகமதாபாதில் நடைபெறவுள்ள சுவாமி நாராயண் சன்னிதானத்தின் பொன்விழா கொண்டாட்டங்களில் காணொலி வாயிலாக கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

2. தமிழகத்தில், ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை மத்தியக்குழுவினர் இன்றும், நாளையும் பார்வையிட உள்ளனர்.

3. மகாராஷ்ட்ரா சட்டப்பேரவையின் மூன்று நாள் சிறப்பு கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

4. உள்நாட்டு போர் தீவிரமடைந்துள்ள சிரியாவிற்கு பயணம் செய்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அகமதாபாதில் நடைபெறவுள்ள சுவாமி நாராயண் சன்னிதானத்தின் பொன்விழா கொண்டாட்டங்களில் காணொலி வாயிலாக கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, குஜராத் மாநில முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் மற்றும் மாநில அமைச்சர்கள் கலந்துகொள்கின்றனர்.

சுவாமி நாராயண் சன்னிதானத்தில் சார்பில் உலகம் முழுவதும் பல்வேறு தன்னார்வ பணிகளில் ஈடுபட்டுள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தொண்டர்களின் சேவையை பாராட்டும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் 30 நாடுகளிலிருந்து ஒரு லட்சத்திற்கும் அதிகமான தொண்டர்கள் பங்கேற்க உள்ளனர்.

**<<<<<<>>>>>**

இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு மத்திய அரசு தொள்ளாயிரத்து 44 கோடியே 80 லட்சம் ரூபாயை நேற்று விடுவித்தது.

இதனை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு அமித் ஷா, சவாலான சூழ்நிலையில், தமிழகத்தில் உள்ள சகோதர, சகோதரிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஆதரவு கரம் நீட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தமிழகத்தில், ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை மத்தியக்குழுவினர் இன்றும், நாளையும் பார்வையிட உள்ளனர்.

முன்னதாக, நேற்று சென்னையில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினை மத்தியக்குழுவினர் சந்தித்து பேசினர்.

அவர்களிடம், முதலமைச்சர் நிவாரணம் தொடர்பான விரிவான மனு ஒன்றை அளித்தார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் காசநோய் பாதிப்பு மற்றும் அந்நோயால் ஏற்படும் இறப்புகளை குறைப்பது தொடர்பான 100 நாள் தீவிர பிரச்சார இயக்கத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, ஹரியானாவில் இன்று தொடங்கிவைக்கிறார்.

பஞ்குலாவில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி, மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திருமதி ஆர்த்தி சிங் ராவ் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 347 மாவட்டங்களில் இந்த பிரச்சார இயக்கம் தீவிரமாக நடைபெறவுள்ளது.

2018-ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற காசநோய் தொடர்பான உச்சிமாநாட்டில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, காசநோயை இந்தியாவிலிருந்து முற்றிலுமாக ஒழிக்க அறைகூவல் விடுத்தார்.

அதன்பின்னர் இந்நோயை விரைவாக கண்டறிந்து சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு முன்முயற்சிகள் தொடங்கப்பட்டன.

100 நாள் பிரச்சார இயக்கத்தில் காசநோய் பாதிப்பு குறித்த விவரங்கள், நோய் அறிதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரிவான சிகிச்சை வசதி, இறப்பு விகிதங்களை குறைத்தல் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது.

காசநோய் எளிதில் தாக்கக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சைக்கான வசதியை ஏற்படுத்துவதோடு விரிவான ஊட்டச்சத்து ஆதரவை வழங்குவதும் இந்த இயக்கத்தின் முக்கிய அம்சமாகும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவையின் மூன்று நாள் சிறப்பு கூட்டத்தொடர் மும்பையில் இன்று தொடங்குகிறது.

சமீபத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்ற, உறுப்பினர்கள் இன்று பதவியேற்றுக்கொள்கின்றனர்.

சட்டப்பேரவைத் தலைவர் தேர்தல் வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினமே முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் தலைமையிலான அரசு பேரவையில் நம்பிக்கை வாக்கு கோருகிறது.

சட்டப்பேரவையின் குளிர்கால கூட்டத்தொடர் இம்மாதம் 16-ஆம் தேதிமுதல், 21-ஆம் தேதிவரை நாக்பூரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், இன்று பீகார் செல்கிறார்.

கிழக்கு சாம்ப்ரான் மாவட்டத்தில் உள்ள மகாத்மா காந்தி மத்திய பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் அவர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

ஆராய்ச்சி மாணவர்களுக்கு பதக்கங்களையும் அவர் வழங்க உள்ளார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் 433 மாணவர்கள் பட்டங்களை பெற உள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் திரு சஞ்சய் ஸ்ரீவத்சவா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

உள்நாட்டு போர் தீவிரமடைந்துள்ள சிரியாவிற்கு பயணம் செய்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது சிரியாவில் உள்ள இந்தியர்களும், தலைநகர் டமாஸ்கஸ்-ஸில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தியர்களுக்காக மத்திய அரசு 9 6 3 9 9 3 - 3 8 5 9 7 3 என்ற அவசர உதவி எண்ணை அறிவித்துள்ளது.

சிரியாவிலிருந்து வெளியேற விரும்பும் இந்தியர்கள் விமான போக்குவரத்து சேவை தற்போது உள்ளதால், கூடியவிரைவில் வெளியேறுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து அங்கேயே தங்கியிருப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வெளியில் செல்வதை குறைத்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

கத்தார் தலைநகர் தோஹாவில் இன்று நடைபெறவுள்ள தோஹா மன்ற கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கலந்துகொள்கிறார்.

புதுமையின் கட்டாயம் என்ற மையப்பொருளில் நடைபெறும் இந்த மன்றத்தின் 22-ஆவது கூட்டத்தில் பக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் உட்பட அந்நாட்டின் முக்கிய அமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்.

நான்கு நாள் அரசு முறைப்பயணத்தின்போது அமைச்சர் ஜெய்சங்கர் இந்தியா – பக்ரைன் உயர் ஆணையத்தின் கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் அப்துல் லதீப் பின் ரஷீத் அல் ஜயானியை-யும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

<<<<<<>>>>>

சமூகத்தில் நிலவும் மனநல பிரச்சினைகள் தொடர்பாக, தேசிய அளவிலான மன நல ஆய்வு புதுச்சேரியில் தொடங்கப்பட்டுள்ளது.

நேற்று இதனை புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர். செவ்வேல் தொடங்கிவைத்தார்.

தேசிய அளவிலான இந்த திட்டம் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் பெங்களூருவில் உள்ள தேசிய மனநல ஆராய்ச்சி மையத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

நாடு முழுவதும் நடைபெறவுள்ள மிகப்பெரிய மனநல ஆய்வுகளில் இதுவும் ஒன்றாகும்.

மனச்சோர்வு, தற்கொலை மற்றும் போதைப்பொருளை பயன்படுத்துவதால் ஏற்படும் உடல் மற்றும் மனநல பாதிப்புகள் குறித்த தரவுகள் இந்த ஆய்வின் போது திரட்டப்பட உள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் மற்றும் பந்தலூர் சுற்று வட்டாரப்பகுதிகளில் வனவிலங்குகளால் ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு நடப்பாண்டு 81 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக கோட்ட வன அலுவலர் திரு வெங்கடேஷ் பிரபு தெரிவித்துள்ளார்.

நேற்று கூடலூரில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி - ஈஸ்ட் பெஞ்கால் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, இன்று மாலை ஐந்து மணிக்கு சென்னையில் நடைபெறவுள்ளது.

மற்றொரு ஆட்டத்தில் பெங்களுரு அணி – கேரளா அணியை எதிர்கொள்கிறது.

முன்னதாக, நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 2-0 என்ற கோல் கணக்கில், முகமதன் ஸ்போர்ட்ஸ் அணியை வென்றது.

------------

ஆசிய இளையோர் மகளிர் ஹாக்கிப்போட்டி இன்று ஓமன் தலைநகர் மஸ்கட்டில் தொடங்குகிறது.

அடுத்த ஆண்டு சிலியில் நடைபெறவுள்ள இளையோர் உலகக்கோப்பை ஹாக்கிப்போட்டிக்கான தகுதி ஆட்டமாக இப்போட்டி இருக்கும்.

இந்த போட்டியின் “ஏ” பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, சீனா, மலேசியா, தாய்லாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளை எதிர்த்து விளையாடவுள்ளது.

“பி” பிரிவில் தென்கொரியா, ஜப்பான், தைவான், ஹாங்காங், இலங்கை ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

நாளை நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--------------

இந்தியாவுக்கு எதிரான அடிலெய்டு கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 86 ரன்களுடன் இன்று தொடர்ந்து விளையாடவுள்ளது.

இப்போட்டியில் ஆஸ்திரேலியா, இந்தியாவை விட 94 ரன்கள் பின்தங்கியுள்ளது.

----------

புனேயில் நடைபெற்றுவரும் புரோ கபடி லீக் போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தமிழக அணி, 40-27 என்ற புள்ளிக்கணக்கில், குஜராத் அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஹரியானா 42-36 என்ற புள்ளிக்கணக்கில் பட்னா அணியை வென்றது.

------------

ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவராக இலங்கை கிரிக்கெட் வாரியத்தலைவர் திரு ஷம்மி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

**<<<<<<END>>>>>**